# நார்வேஜியன் குடிபெயர்வு மேல்முறையீட்டு வாரியம் (யுஎன்இ)

உட்லென்டிங்ஸ்னெம்ன்டா (யுஎன்இ) என்பது ஒரு சுதந்திரமான நீதிசார் மேல்முறையீட்டு வாரியமாகும். குடிபெயர்வு சட்டத்தின் அடிப்படையில் குடிபெயர்வு இயக்குனரகம் (யுடிஐ) நிராகரித்து விடுகிறவர்களின் மேல்முறையீடுகளை இவ்வாரியம் கவனிக்கிறது. யுஎன்இ நிர்வாக ரீதியில் தொழிலாளர் நலன் மற்றும் சமூகச் சேர்ப்பு அமைச்சகத்தின் (ஏஜடி) கீழ் செயல்படுகிறது. சட்டமியற்றல், நெறிப்படுத்தல், பட்ஜெட் மற்றும் பொது முன்னுரிமைகள் மூலம் அமைச்சகம் வாரியத்தை நிர்வாகம் செய்தாலும் சட்ட விளக்கம், விருப்பத்தைச் செயல்படுத்தல் அல்லது தனிநபர் வழக்குகளில் தீர்மானித்தல் போன்றவற்றில் வாரியத்தை ஆணையிடமுடியாது.

யுஎன்இ கையாளும் மேல்முறையீடுகள்: புகலிடம், குடும்ப உறுப்பினர்கள் திரும்பச் சேர்தல், பல்வேறு குடியிருப்பு அனுமதிகள், வேலை அனுமதிகள், நிரந்தர குடியேற்ற அனுமதிகள், அனுமதி மறுப்பு, வெளியேற்றம் மற்றும் விசாக்கள்.

யுஎன்இயில் 170க்கும் சற்று மேலாக ஊழியர்கள் உள்ளனர். அதில் 18 பேர் நீதிபதிகளாகத் தகுதி பெற்ற வாரியத் தலைவர்கள். அதனோடு தோராயமாக 250 சாதாரண நபர்கள் தற்காலிக விசாரணை வாரிய உறுப்பினர்களாகத் தன்னார்வமாகச் சேவை ஆற்றுகிறார்கள்.

முடிவுகளை அடைய யுஎன்இ ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளை வைத்துள்ளது. முறையீட்டு வாரிய விசாரணைகளில் மேல்முறையீட்டாளர் கலந்துகொள்ளுதல், மேல்முறையீட்டாளர் இன்றி நடைபெறும் தற்காலிக முறையீட்டு வாரிய விசாரணைகள் ஆகியவற்றில் வாரியத் தலைவர் மட்டும் அல்லது சட்டச் செயலகம் மூலம் முடிவுகள் அடையப்படுகின்றன. ஒவ்வொரு வழக்குக்கும் விசாரணை முறையை ஒரு வாரியத் தலைவர் நிர்ணயிக்கிறார். விசாரணை முறை பற்றி எடுக்கப்படும் முடிவுகளை மேல்விசாரணைக்கு உட்படுத்த முடியாது.

குடிபெயர்வுச் சட்டப்படி, சந்தேகம் பற்றிய தீர்க்கமான கேள்விகள் இல்லாத வழக்குகளை முறையீட்டு வாரிய விசாரணை இன்றி ஒரு வாரியத் தலைவர் மட்டும் அல்லது சட்டச் செயலகம் மூலம் முடிவு செய்ய இயலும். சட்டங்களின் குறிப்பிட்ட தேவைகள் மற்றும் கட்டுப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா எனப் பார்ப்பதன்வழி மிக எளிதாக ஒரு கட்டுப்பாட்டு முறை மூலம் வரையறுக்கப்படும் வழக்குகளை இதற்கு சான்றாகச் சொல்லலாம். சந்தேகம் பற்றிய தீர்க்கமான கேள்விகளை உடைய வழக்குகளில் மட்டுமே முறையீட்டு வாரிய விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

மேல்முறையீட்டாளர் கலந்துகொள்ள சில முறையீட்டு வாரிய விசாரணைகள் நடைபெறும். இருந்த போதிலும், மேல்முறையீட்டாளர் இல்லாமலேயே தற்காலிக முறையீட்டு வாரிய விசாரணைகள் நடைபெறும். சான்றாக வழக்குக்குத் தொடர்புடைய உண்மைத் தகவல்கள் பற்றி சந்தேகம் இல்லாதபோது மேல்முறையீட்டாளரிடம் இருந்து தகவல் பெறத் தேவையில்லை. இதில் மேல்முறையீட்டாளர் இல்லாமலேயே முறையீட்டு வாரியம் ஒரு

விசாரணையை நடத்தி வழக்கு பற்றி முடிவெடுக்கலாம். மாற்றாக தொடர்புடைய உண்மைத் தகவல்கள் மீது வாக்குவாதம் இருப்பின், அல்லது மேல் முறையீட்டாளர் தேவையான விளக்கம் தந்து உதவமுடியும் எனில் மேல்முறையீட்டாளர் வாரிய விசாரணையில் கலந்துகொள்ள வேண்டிக்கொள்ளலாம்.

முறையீட்டு வாரிய விசாரணைகளுக்கு ஒரு வாரியத் தலைவர் தலைமை வகிக்க, இரு சாதாராண வாரிய உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள். முறையீட்டு வாரியம் கையாள வழக்குகளை யுஎன்இ-யின் சட்டச் செயலகம் தயாரித்து அளிக்கும். வாரியத் தலைவர் வழக்கு ஆவணங்களை பிற வாரிய உறுப்பினர்களுக்கு விசாரணைக்கு முன்பே அளிப்பார். கேமரா முன் விசாரணைகள் நடைபெறும்.

வழக்கு, குடிபெயர்வுச் சட்டத்தின் பொருத்தமான பிரிவுகள், குடிபெயர்வு வரன்முறைகள் மற்றும் வழக்கின் மையப் பிரச்சனை ஆகியவற்றின் சுருக்கமான அறிமுகத்தோடு வாரிய விசாரணைகள் தொடங்கும். மேல்முறையீட்டாளர் கலந்துகொள்ளும் வழக்குகளில், அவன்/அவள் வழக்குக்குத் தேவையான நிஜமான தகவல்களையும் முக்கியமான முடிவுகளையும் தெரிவிக்கலாம். வழக்கைத் தொகுத்துச் சொல்ல மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞருக்கு அல்லது பிரதிநிதிக்கு வாய்ப்பு தரப்படும். முறையீட்டு வாரிய விசாரணைகளில் கையாளப்படும் வழக்குகள் பெரும்பான்மை வாக்குகள் அடிப்படையில் முடிவு செய்யப்படும்.

தனிநபர் வழக்குகளில் எடுக்கப்படும் முடிவுகளை அமைச்சகம், அரசு அல்லது யுஎன்இ-யின் நிர்வாகம் மறுபரிசீலனை செய்யாது. ஆனால் வழக்கமான நீதி அமைப்பு மூலம் மேல்முறையீடு செய்யப்படலாம்.